# SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

# ப்ரம்மவித்தியா பத்திரிகையின்.

## அநுபந்தம்.

புத் ௨]  சிதம்பரம் விளம்பி ஸு சித்திரை மீ ௨௪ க்கு 1898 ஸு மே மீ 6௨  [இல. 1.


## மகா பாசுபதாஸ்திர பராவர்த்தன ப்ரயோ கோபசங்காரமும், செந்திநுதையருக்கு ஹிதோபதேசமும்.

—:(:):—

ஐயரே! வீண் துராக்கிரகத்தால் ஆரியதூஷணஞ் செய்வது நும்போலியர்க்கழகோ! நீவிர் எத்தனை எட்டிப்பார்த்தாலும் ஹனுமந்த சுவாமி அஞ்ஞான்று அஞ்சனையின் கர்ப்பம் விட்டதும், ஆதித்தனை விழுங்க எத்தனித்தாற்போலல்லவோ நுமது முயற்சி சிவரகஸ்யாதி மகேதிகாசப் பிரசித்த மகாவதாரபுருஷ ஸ்ரீஜகத்குருநாதன் வளர்ந்தருளிய ஸ்ரீமதேகாத்துமவாத விசத வேதாந்த சத்சித்தாந்தம் ஏகதேசமேனும் குறைவுபடுமோ? பாரும்! ஆரியதேசத்திலேயே பிறந்து ஆரியருடனே கலந்து வளர்ந்து ஜனனம்முதல் ஆரியத்தை முறைபிறழாது பயின்று அதிகமான நாவன்மையையும் அற்புதச் சக்தியையும் பெற்ற அனேகாவதார புருடர்கள் மதித்ததூஉம், அனேக சுதேசபண்டிதப்புறமதவாசிரியர் அற்புதப்பண்டிதர் எதிர்த்துப் பார்த்தழிக்கமுயன்றும் அவர் முயற்சி தம்மிடம் பயன்பெறவொட்டாது ஓங்கி ஆயிரக்கணக்கான ஆண்டுகளைக்கண்டுளதும், ஸ்ரீமத் பரிமளாசாரியாத்வைதவித்யா பரமாசாரியராய் இத்தேசத்தில் அவதரித்தருளிய பரமேசுவரர்களம்ச மூர்த்திகளாய ஸ்ரீமதப்பயதீக்ஷிதராதி ஸர்வக்ஞர் சிரமேற்கொண்டு புகழும் பதம்பெற்றதும், 'வையாஸிகமதம், வேதாந்தமதம், ஔபநிடதமதம், அத்வைதமதம், ஸ்மார்த்தமதம், வைதிகமதம்' என்பதாதி சிறந்த நாமங்களால் அனேக வடநூலாசிரியரால் வழங்கப்படுவதுமான அனாதிகால சம்சித்த சுருதி ஸ்மிருதி புராணாதி வித்தியாஸ்தானப் பிரமாணபல சித்தமான ஸ்ரீமதேகாத்துமவாத சித்தாந்தத்தை நீர் ஓர் "விஜயத்துவஜ" 'மென்ற தமிழ் பத்திரிகையின் ஓர் மூலையில் சிலவரிகளில் சிலஆங்கிலேய 'பிஜாக்ஷரங்களாலும் சில தாந்திரிகர் வசனங்களாலும் சில கட்டுக்கதைகளாலும் சில போலிநியாயங்களாலும் சில புருஷதூஷணப் புன்மொழிகளாலும் சில அவைதிக சம்பிரதாய பாஷணங்களாலும் மற்றும் அறிஞர் வெறுக்கும் வேறு விஷயங்களாலும் கண்டித்துவிட்டுப் புதிதாய்நீவிராவதுகொண்டொழுகும்சித்தாந்த சாஸ்திரங்களிலேனும்இன்று நீர் சுவீகரித்துக்கொண்ட ப்ரம்மசூத்திர பாஷ்யத்திலேனும் மற்ற எந்தப் பூர்வாசாரியர் சாஸ்திரங்களிலுங்கூட அகப்படாத புதிய வுபநிடத தூர்விபாகத்தைச்செய்து அவற்றில் சிலவற்றை வெறுத்தே யப்பிரமாணமென்ச்சொன் மாத்திரையால் எழுதி அதற்கு ஆங்கிலேயர் சட்டத்தையே பிரமாணங்காட்டி அதுவே போதுமென விறுமாந்து தம்முட்டாமே களிப்ப துசிதமல்ல. சினேகிதரே! நீவிர் எவ்வளவு கோபங்கொண்டு சொல்லிய தூஷணையை மீண்டும் சொல்லாது வைதாலும் உம்மிடமிருக்கும் மதாபிமான மிகுதிக்குத்தக்கபடி சொல்லவேண்டியதைச் சொல்லாது விடுவது உண்மையைக் கடைப்பிடித் துலகத்துக்காகப் பாடுபடுவோர்க்குசிதமல்லவாகையால், ஏதோ கொஞ்சம் சொன்னோம். பண்டிதரே! பக்ஷபாதமொழித்து வேதாதி பதினான்கு வித்தியாஸ்தானங்களில் சொல்லப்பட்ட நன்னெறியைக் கைப்பிடித்து நல்லோர் மூதறிஞர் சென்ற நல்வழிநாடி நல்லோருடன் கூடி வேதவேதாந்த வைதிக விசுவாசம் பெற்று ஆத்துமவிசாரபரராய் ஆயுளையெல்லாம் அவிமுக்த திவ்விய புண்யக்ஷேத்திரத்தில் விசுவநாதன் தேஜஸில் சிவமகாபுராணம் வாயுசம்ஹிதை கூறிய வைதிகபாசுபத மகாயோகிய மகோபாக்கியான சாரத்தைத் தழீஇ, சுத்த சிவ கைவல்ய பரமானந்தம்பெற்றுச் சிவமாகும் பாக்கியம் ஏதோ பூர்வபுண்ணியத்தாற் கிடைத்தும் அதை மாற்றிக்கொண்டு அன்று உமது ஜன்மபூமியை ஆண்ட இராவணன் மகாப்பிராமணனாய்ப் பிறந்தும், மாதவம் நிறைந்தும், ஸாமம் ஆயிரம் சாகைகளை அம்புலி சூடி அகிலநாதன் அகமகிழப்பாடத்திறம்பெற்றும், அகிலதேவர்களும் நடுங்கத்தக்க சௌரியாதி குண நிதியாயுமிருந்தும் இறுதியில் ஸ்ரீநிவாஸத்துவேஷத்தால் வீணில் அவ்வளவு பெருமையை இழந்தாற்போல பெருமையை இழப்பது நியாயமோ? ஏதோ சில வருணவர் தம்மவருக்குள்ள வேதாதிகார வின்மையை நோக்கித்தமக்குக்கிடைத்த வடவியலிலக்கிய அறிவுக்கேற்றவாறு எழுதிவைத்த சில. திராவிடவரிகளையே வேதாந்தங்களாய் நம்பி நடுவில் நிற்கவேண்டிய தமக்குத் தலைவிதியோ? உமது குலத்தின் பேரணிகளாகிய பெரியோர்வழி உமக்குக் கைத்ததென்னையோ? உமது கோத்திர மூல மகாமுனிவர் சித்தாந்தம் உமக்கு வேண்டாதொழிவ தெதனால்? உமது சூத்திரகர்த்தர் உபதேசித்தருளிய திவ்விய மார்க்கம் உமக்கேன் வெறுக்கத்தக்கதாயது? சைவரே! சிவமகாபுராணத்தில் வைதி

# ப்ரம்மவித்யா அநுபந்தம்

சிவாகமப் பிரவர்த்தக பரமாசாரிய வவதாரபுருஷரெனப்புகழப்பட்ட ஸ்ரீஜைகிஷவ்யமாமுனிவர் அருளிய சிவரகசியத்தில் சிவாம்சாவதாரமெனக் குறிக்கப்பெற்ற ஸ்ரீஜகத்குருநாதர் வெளியிட்டருளிய திவ்ய சித்தாந்தம் உமக்சறுவறுப்பாயது எக்காரணத்தாலோ? வைதிகரே! வைதிகமார்க்கம் உமக்கேன் ஏற்கக்கூடாதொழிந்தது? ஆஸ்திகரே! ஆத்மாஸத்வாதத்தை என் ஒப்பினீர்? ஆரியரே! உமக்கு ஆரியரைத் தூஷிப்ப துசிதமோ? இனி இவ்வழிகளை இம்மட்டிலாவது நிறுத்திவிடும். உண்மையாய் விசுவேசுவரனென்று ஸ்ரீலோககுருநாதனுக் குபதேசித்தருளிய திவ்ய சிவாத்துவித சித்தாந்தத்தை நாடும்; வைதிகத்தைக் கொண்டாடும்; அவைதிகத்தை ஒழித்திடும்: ஆன்ம கைவல்யத்தை யறிந்திடும்; தானே சிவமாகுந் தன்மையைப் பெற்றிடும்; தனிமுதலான்மவாதமொழித்திடும்; ஆகம வழியை அனுசரித்திருந்திடும்; சுத்தாத்துவிதம் சுருதிகள் சொல்வதைச் சூன்யவாதிகள் மறைத்ததோர் வழி செல்லாது நல்வழி சென்று நீர் சிவனாய் எங்கும் நிறைந்த ஏகவான்மாவாய் கதிரவன் முன்னர் கரைந்திடு மிருளென கனவென வுலகை மயர்வறமதித்திடும். உண்மையை ஈசன் உமக்கருள் செய்யுக. உலகெலாம் வைதிகம் ஓங்கியே வளருக. பரசிவன் பெருமை பரிதிபோற்றுலங்குக. பண்டிதர் யாவரும் பகையற்றுய்க. பாம்பணி பரமன் பஞ்சமூர்த்தியுமாய் எம்மனோருள்ளம் கவர்ந்திடும் ஏகன்? ஓ சிவனேச! உம்மையும் எம்மையும் தம்மையும் தானாயாக்கியே ஆளுக. அகிலலோகேசுவரன் அடியிணை பணிந்து யாம் அத்துவித சற்சித்தாந்தவழி அன்று விளக்கிய ஆரியகுல இந்துவேத வைதிகம் வேதாந்தத்துடன் ஊழிகாலம் வரை உயர்ந்து நல்லறிவை நம்மவர்க்கீந்து நற்கதி சேர்ந்திட நாதனார் சரணனளினமே பணிவாம். செந்திநாதையரே! சினமது விடுத்து நீர் செப்பிய யாவையும் சீருடன் படித்து உசித வுத்தரம் உண்மையா யளிப்பீரக; வீண்வழி செல்லவேண்டாம். வித்வசிகாமணி! சுபம்

மகா பாசுபதாஸ்திர பராவர்த்தன ப்ரயோகம்
என்கிற வைதிகசந்திரமௌலி முதற்பா
கம் முற்றிற்று.

உ

தற்காலம் காசி
யில் வசிக்கும்
யாழ்ப் பாணம்
ம-ள-ள-ஸ்ரீ
சி. செந்திநாதையரவர்களால் வரையப்பட்ட மகாபாசுபதாஸ்திரமென்னும்
புஸ்தகத்திற்கு மறுப்பாக சிதம்பரம் ப்ரம்மவித்தியா பத்திராதிபரும்
பாரமேசுவரோபநிஷன் மார்க்கப் பிரவர்த்தகரும் ஸ்ரீயன் மகா
மகோபாத்தியாய ஸ்ரீதியாகராஜ மகிபுங்கவர் சிஷ்
யருமான பரசமய பஞ்சானன பாஞ்சு
ஜன்ய பண்டித ப்ரம்மஸ்ரீ
ஸ்ரீநிவாஸ
சாஸ்திரிகளவர்களது
சிஷ்ய கோடிகளுள் ஒருவரான ப்ரம்
மஸ்ரீ நாகலிங்க சிவனால் இயற்றப்பட்ட
மகாபாசுபதாஸ்திர பாரவர்த்தன மென்ற வைதிக சந்திர
மௌலியில் முதற்பாகம் முற்றுப் பெற்றது.